**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**மேட்டூர்.**

**OS.No**. 136/2024

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மலர்விழி | கணவர் பெயர் | : சதிஷ்குமார் |
| தகப்பனார் பெயர் | ---- | வயது | : 36 |
| கிராமம் | கொளத்தூர் | நாள் | : 13.08.2025 |
| தாலுகா | மேட்டூர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

**முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கில் 2ம் வாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. என் தந்தை ராஜகோபால் அவர்களின் இறப்பு சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.1** ஆகும்.

2. என் தந்தை மற்றும் என் தாயாரின் திருமண அழைப்பிதழ் அசல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3. என் தந்தை மற்றும் தாயாரின் திருமணத்திற்கு கோவிலில் வழங்கிய ரசீது அசல் **வா.சா.ஆ.3** ஆகும்.

4. என் தந்தை கடந்த 28.10.2022ம் தேதியில் எழுதி வைத்த உயில் அசல் **வா.சா.ஆ.4** ஆகும்.

5. என் தந்தையின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகும்.

6. என் தாயாரான 1ம் வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆகும்.

7. எங்களுடைய குடும்ப அட்டை கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.7** ஆகும்.

8. என்னுடைய ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.8** ஆகும்.

9. என் தாயார் வாரிசு சான்றிதழ் கோரி கடந்த 23.11.2023ம் தேதியில் கணினி மூலம் விண்ணப்பித்தற்கான ரசீது கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.9** ஆகும்.

10. 05.04.2021 ல் HMOP.No.131/2020 என்ற வழக்கின் மனு மற்றும் உத்தரவு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.10** ஆகும்.

11. HMOP.No.131/2020 என்ற வழக்கின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.11** ஆகும்.

12. HMOP.No.131/2020 என்ற வழக்கின் உத்தரவு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.12** ஆகும்.

13. புகைப்படம் மற்றும் குறுந்தகடு மற்றும் அதற்குண்டான ரசீது அசல் **வா.சா.ஆ.13** ஆகும்.

14. என் தாயாரான 1ம் வாதியின் இறப்பு சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.14** ஆகும்.

15. என் தந்தை ராஜகோபால் பெயரில் இருந்த கடனை திருப்பி செலுத்தியதற்னாக ரசீது அசல் **வா.சா.ஆ.15** ஆகும்.

16. 04.02.2025ம் தேதியில் இந்தியன் வங்கி வழங்கிய கடனை திருப்பி செலுத்தியதற்னாக சீட்டு அசல் **வா.சா.ஆ.16** ஆகும்.

(தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.)

(குறுக்கு விசாரணைக்காக வழக்கு 21.08.2025ம் தேதி ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.